செ.வெ.எண்: 28/மே நாள்: 13.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 தேர்தல் வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் இன்று (13.05.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் வாக்குப்பதிவு முடிந்தவுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பான முறையில் வைப்பது மற்றும் தேர்தல் வாக்கு எண்ணுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு வருகின்ற மே 16-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளான இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், திருவாடனை ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். வாக்குப்பதிவு முடிந்தவுடன் சட்டமன்ற தொகுதிகள் வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான அறைகளையும், வாக்கு எண்ணும் அறைகளில் பாதுகாப்பு வசதிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்புகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வாக்கு எண்ணும் மையத்தில் தமிழக காவல்துறை மற்றும் மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் ஒருங்கிணைந்து பாதுகாப்பு பணியினை மேற்கொள்ளவுள்ளார்கள். தேவையான இடங்களில் சி.சி.டிவி கேமராக்களைப் பொருத்தி கண்காத்திட வேண்டும் என அலுவலர்களுக்கு பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இதுதவிர, பத்திரிக்கை மற்றும் செய்தியாளர்களுக்கான ஊடக தகவல் அறையினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன், (முதுகுளத்தூர்) திரு.ராமையா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி முதல்வர் திரு.சித்திரைவேல், பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் திரு.குருதிவேல்மாறன்,இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.மாரி உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**